அ1/140/2026 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

திருநெல்வேலி.

நாள் : 09.02.2026.

# அறிவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் செயல்படும் வட்டார இயக்க மேலாண்மை அலகுகளில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்கு பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிட விபரம் :-**

| வ. எண் | வட்டாரத்தின் பெயர் | வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அம்பாசமுத்திரம் | 2 |
| 2 | சேரன்மகாதேவி | 3 |
| 3 | களக்காடு | 2 |
| 4 | மானூர் | 4 |
| 5 | பாளையங்கோட்டை | 2 |
| 6 | பாப்பாக்குடி | 2 |
| 7 | இராதாபுரம் | 2 |
| 8 | வள்ளியூர் | 1 |
| 9 | நான்குநேரி | 4 |
| | **மொத்தம்** | **22** |

- பணியிடமானது எழுத்து தேர்வு மற்றும் நேர்முக தேர்வின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.

**வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தகுதிகள் :-**

1. ஏதேனும் ஒரு பட்ட படிப்பில் தேர்ச்சி மற்றும் MS Office-ல் குறைந்தது 3 மாத சான்றிதழ் வகுப்பு (Certificate Course) சான்றிதழ் பெற்றவராக இருத்தல் அல்லது Computer Science அல்லது Computer Application -ல் பட்ட படிப்பு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.
2. 01.01.2026-ல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை போன்ற திட்டங்களில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

4. வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரார் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய எல்லை பகுதிக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (Residence in same block).

**விண்ணப்பிக்கும் முறை :**

1. விண்ணப்படிவம் https://tirunelveli.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்ய வேண்டும்.
2. தகுதியான பெண் விண்ணப்பத்தாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் பிறந்த தேதி, பணி அனுபவ சான்று, கல்விச்சான்று, சாதி சான்று ஆகியவைகளின் ஒளிநகல் (Xerox Copy) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
4. விண்ணப்படிவத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
5. தகுதியில்லாத மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.45 மணி வரை நேரிலோ அல்லது இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பூமாலை வணிக வளாகம், புதிய பேருந்து நிலையம் அருகில், திருநெல்வேலி அஞ்சல் - 627007, திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரிக்கு அஞ்சல் மூலம் **16.02.2026 (திங்கள் கிழமை)** பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

**விண்ணப்பிக்க கடைசி நாள் 16.02.2026**

**தொலைபேசி எண்: 0462- 2903302**

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, களக்காடு, மானூர், நாங்குநேரி, பாளையங்கோட்டை, பாப்பாக்குடி, இராதாபுரம், வள்ளியூர் ஆகிய 9 வட்டாரங்களில் காலியாக உள்ள 22 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட உள்ளது.

- பணியிடமானது எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.

**<u>வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தகுதிகள்:</u>**

1) ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி மற்றும் MS Office-ல் குறைந்தது 3 மாத சான்றிதழ் வகுப்பு (Certificate Course) சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும் அல்லது கணினி அறிவியல் அல்லது கணினி பயன்பாடுகளில் இளங்கலை பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2) 30 வயதிற்குள் மிகாமல் இருக்க வேண்டும்.
3) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் SHG/PLF போன்றவற்றில் குறைந்தது 05 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்
4) வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பணியிடமுள்ள வட்டாரத்தின் எல்கை பகுதிக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (Residence in Same Block)
5) இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். இரு சக்கர வாகனம் நன்றாக இயக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
6) சிறந்த நன்னடத்தையுடன் இருக்க வேண்டும்.
7) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்டம்/ புதுவாழ்வு திட்டம்/ IFAD திட்டம், மாநில அரசின் இதர திட்டங்கள் போன்றவற்றின் கீழ் பணிபுரிந்து நிரந்தர பணிநீக்கம்/ தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருக்க கூடாது.

**விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்வதற்கான இணையதள முகவரி**

**<u>https://tirunelveli.nic.in</u>**

1) விண்ணப்பதாரர்கள் பிறந்த தேதி, பணிபுரிந்ததற்கான பணி அனுபவச் சான்று, கல்வித் தகுதி, சாதிச் சான்று ஆகியவைகளுக்கு ஒளிநகல் (Xerox Copy) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2) விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

3) தகுதியில்லாத மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலக வேலை நாட்களில், காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை நேரிலோ அல்லது இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கட்டிடம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கொக்கிரகுளம்- 627009, திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 16.02.2026 (திங்கட்கிழமை) பிற்பகல் 05.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி நாள்: 16.02.2026 பிற்பகல் 05.45மணி வரை

9/2-26

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி மாவட்டம்

9/2/26